# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## தொல்பொருட்களை பாதுகாக்கும் ஒழுங்கமைப்பு
## *(கூட்டிணைத்தல்)*

*(தனியார் உறுப்பினர் சட்டமூலம்)*

**தொல்பொருட்களை பாதுகாக்கும் ஒழுங்கமைப்பைக்
கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*கம்பஹா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அஜித் மான்னப்பெரும அவர்களால் 2015, திசெம்பர் மாதம் 15 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2015, நவெம்பர் மாதம் 30 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***52 ஆம் சட்டமூலம்*** ]

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*
*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : *ரூபா 8.00*** **தபாற் செலவு : *ரூபா 10.00***

## தொல்பொருட்களை பாதுகாக்கும் ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்)

## தொல்பொருட்களை பாதுகாக்கும் ஒழுங்கமைப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

முன்னுரை.

''தொல்பொருட்களை பாதுகாக்கும் ஒழுங்கமைப்பு'' என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான ஒழுங்கமைப்பொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக் கிணங்கச் சொல்லப்பட்ட ஒழுங்கமைப்புடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக்கொண்டு நடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட ஒழுங்கமைப்பு எப்பல்வேறு குறிக்கோள் களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப் பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காக இருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம் 2015 ஆம் ஆண்டின்     ஆம் இலக்க, தொல்பொருட்களை பாதுகாக்கும் ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

தொல் பொருட்கள் பாதுகாக்கும் ஒழுங்கமைப் பைக் கூட்டிணைத்தல்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் ''ஒழுங்கமைப்பு'' எனக் குறிப்பீடு செய்யப் படும்) ''தொல்பொருட்களை பாதுகாக்கும் ஒழுங்கமைப்பின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோ ரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் ''கூட்டுத்தாப னம்''எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ''தொல்பொருட்கள் பாதுகாக் கும் ஒழுங்கமைப்பு'' என்ற பெயரின்கீழும் மகுடத்தின் கீழும் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட

குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலா மென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக் கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப் படுத்தப்படுகின்றது :-

(அ) இலங்கைத் தீவில் பரந்து காணப்படும் தொல்பொருட் களைக் கண்டுபிடிக்க உதவுதல் மற்றும் அனுசரணை வழங்கல் ;

(ஆ) தொல்பொருட்களைப் பாதுகாப்பதற்காக மனிதாபி மான மற்றும் பௌதீக வளங்களை வழங்குதல் ;

(இ) தொல்பொருட்களைப் பாதுகாப்பது தொடர்பாக முயற்சிக்கும் இலங்கை வாசிகளை ஒன்று சேர்த்தல்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**4**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், தலைவர், உப தலைவர், செயலாளர், உபசெயலாளர், பொருளாளர், கணக் காய்வு அலுவலர் மற்றும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமைய தேர்ந்து நியமிக்கப்படும் ஆறு உறுப்பினர்களையும் கொண்ட பணிப்பாளர் சபை என அழைக்கப் படும் நிறைவேற்று சபை ஒன்றினால் இச்சட்டத்தினதும் ஏனைய ஏற்பாடுகளுக்கும் அமையவும் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளுவதற்கு பொறுப்பிக் கப்பட்ட எல்லாவற்றையும் கூட்டுத்தாபனத்தின் பேரில் செய்வதற்கு கட்டுப்பாட்டுச் சபைக்கு அதிகாரமுள்ளதுடன், அதன் கருமங்கள் எதுவும் காலத்திற்குக் காலம் எடுக்கும் தீர்மானத்தின் மீது, எவரேனும் அலுவலரிடம் பொறுப்பிக்க முடியும்.

கூட்டுத்தாபனத்தின் அதிகாரங்கள்.

**5.** இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய,-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படும் காணிகளை அல்லது கட்டடிடங்களைக் கொள்வனை செய்வதற்கும், சுவீகரிப்பதற்கும், குத்தகைக்கு எடுப்பதற்கும் நிறுவுவதற்கும் அல்லது வேறு வகையில் பெறவும் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்காக அரசினது அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள், நிறுவனங்கள் என்பவற்றிலிருந்து கடன்களையும் (உள்நாட்டு, வெளிநாட்டு) உதவிகள், கொடைகள் என்பவற்றைப் பெறவும் ;

(இ) செலாவணி பில் பத்திரங்கள், காசோலைகள், உறுதிப் பத்திரங்கள் அத்துடன் ஏனைய கொடுக்கல் வாங்கல்களைச் செய்யக்கூடிய சாதனங்களைத் தயாரிக்கவும், எழுதவும், கையேற்கவும், கழிவுகளை வழங்கவும், கொடுக்கல்வாங்கல் செய்யவும், கொள்வனவு செய்யவும், விற்பனை செய்யும், விநியோகிக்கவும், வங்கிக் கணக்குகளைத் திறக்கவும், செயற்படுத்தவும் முடிவுறுத்தவும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்காக உடனடியாகத் தேவைப்படாத ஏதேனும் நிதிகளை முகாமைச் சபை பொருத்தமெனக் கருதும் வகையில் முதலீடு செய்வதற்கும் ;

(உ) உதவு தொகைகள், சந்தாக் கட்டணங்கள், கொடைகள், நன்கொடைகள் மற்றும் எல்லா வகையிலுமான பரிசுகளைக் கோரவும் கையேற்கவும் ;

(ஊ) எவரேனும் ஆளொருவர் ஏதேனுமொரு கம்பெனியோடு அல்லது ஆட்கள் குழுவொன்றுடன் உடன்படிக்கைகள் அல்லது ஒப்பந்தங்களைச் செய்யவும் ;

(எ) ஏதேனும் நிலையான ஆதனத்திற்கு அல்லது தனிப் பட்ட ஆதனத்திற்கு ஏற்புடைய நிபந்தனைகளைப் பொறுப்பேற்கவும், ஏற்றுக்கொள்ளவும், நடைமுறைப் படுத்தவும் நிறைவேற்றவும், நிர்வகிக்கவும் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் பதவிதாங்குநர்களை, சேவை யாளரை நியமனஞ் செய்யவும், சேவையில் ஈடுபடுத்த வும், பதவி நீக்கஞ்செய்யவும், அவர்களின் சேவையை முடிவுறுத்தவும், கூட்டுத்தாபனம் தீர்மானிக்கும் சம்பளங்கள், படிகள், பணிக்கொடைகள் என்பவற்றைக் கொடுப்பனவு செய்யவும் ;

(ஐ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்காக இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் ஊழியரைப் பயிற்றுவிக்க வும் ;

(ஒ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முறையாகவும் பயனுறுதியாகவும் நடைமுறைப்படுத்த அவசியமான அல்லது சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்றவாறு ஏனைய சகலவற்றையும் செய்தல்.

கூட்டுத்தாப னத்தின் விதிகள்.

**6**. (1) ஏதேனும் பொதுக் கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்க ளிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்குப்பெரும்பான்மை கொண்டு பின்வரும் கருமங்கள் எல்லா வற்றுக்கும் அலலது எவற்றுக்கும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல், உறுப்பினர் களைச் சேர்த்தல், அவர்கள் விட்டுவிலகல் அல்லது அவர்களைப் பதவி விலக்கல் ;

(ஆ) பணிப்பாளர் சபையைத் தேர்ந்து நியமித்தல், பதவி தாங்குநர்கள் பதவியை விட்டகலல் அல்லது பதவியி லிருந்து நீக்கப்படுதல் மற்றும் பணிப்பாளர் சபையின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் ;

(ஈ) பணிப்பாளர் சபையின், கூட்டுத்தாபனத்தின் அல்லது ஏதேனுமொரு உபகுழுவின் கூட்டங்களைக் கூட்டுதலும் நடாத்துதலும் அவை தொடர்பான நடவடிக்கை முறையும், அத்தகைய கூட்டங்களின் நேரங்களும், இடங்களும், அறிவித்தல்களும், நிகழ்ச்சிநிரலும், அதற்கான கூட்டநடப்பெண்ணும் அதில் அலுவல்களை நடாத்துதலும் ;

(உ) கூட்டுத்தாபனம் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கான தகைமைகளும் தகைமையீனங்களும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும் அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவிலுள்ள விதிகள் இச்சட்டத்தினது அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினது ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக விராத வகையில் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளாகக் கருதப்படுதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்றைப்போன்று அதே முறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் அனைவரும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**7.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அதன் நிதியாண்டு ஒவ்வொரு ஆண்டிலும் சனவரி 1 ஆம் திகதியிலிருந்து திசெம்பர் 31 ஆம் திகதி வரையாகும்.

(2) கூட்டுத்தாபனத்துக்கு அன்பளிப்பு, நன்கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக் கொடைகள் என்ற வகையாகக்

கிடைக்கப்பெறும் எல்லாப் பணங்களும் முகாமைச்சபை தீர்மானிக்கும் ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் பெயரில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**8.** (1) கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை கூட்டுத்தாபனத்தால் பெறப்பட்டவையும் அதனால் செலவிடப்பட்டவையுமான எல்லாப் பணத் தொகைகள் பற்றியனவுமான முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(2) ஒவ்வோராண்டும் அரச அங்கீகாரம் பெற்ற கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவரால் மன்றத்தின் வருடாந்த கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், அக்கணக்காய்வு அறிக்கை அடுத்துவரும் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

கலைக்கப்பட்டதன் மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்.

**9.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாக் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்த பின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபன உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படல் ஆகாது ; ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை உடையதுமான அவற்றின் விதிகளின்படி அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டதுமான வேறு நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றுதல் வேண்டும். அத்தகைய நிறுவனமானது கலைக்கப்படும் பட்சத்தில் அல்லது அதற்கு முன்னர் கூட்டுத்தாபன உறுப்பிர்னர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**10.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினை, பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கும் ஆள் ஒருவரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டுமென்பதுடன், தலைவர், பணிப்பாளர் சபை உறுப்பினர் ஒருவர் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்குச் சான்றாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதி கையொப்பமிடுதல் வேண்டும். அப்படி கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.*

**11**. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும், இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம், அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**12**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்